Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.225 /2025**

Preliminary Register

Deposition of **PW- 1(recall and cross)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செந்தில்குமார் | Father Name | : | தர்மராஜ் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 7th day of May 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை. (ச/பி.348 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி -</u>

நான் சம்பவயிடத்திற்கு சென்ற போது அருகில் வசிக்கும் நபர்கள் மற்றும் கிராம வாசிகள் அங்கு கூட்டமாக இருந்தார்கள் என்றால் சரிதான். நான் மனு விசாரணைக்காக சம்பவ இடத்தில் இருந்த போது அங்கு பிரச்சனை ஏற்பட்டு சத்தமாக இருந்தது என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்தில் இருந்து எனது வாகனத்தை தள்ளித்தான் நிறுத்தியிருந்தேன் என்றால் சரிதான். எனது வாகனத்தை கூட்டத்தில் யார் தள்ளிவிட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. கீழே கிடந்த எனது வாகனத்தை நான் தூக்கும் போது தான் எனக்கு கையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி மது போதையில் சத்தம் போட்டுக்கொண்டிருந்ததால் எதிரி தான் இச்சம்பவத்தில் ஈடுபட்டிருப்பார் என்று காழ்ப்புணர்ச்சி காரணமாக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.05.07 18:15:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.225 /2025**

Preliminary Register

Deposition of **PW- 2 (recall and cross)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | இலக்கியா | Father Name | : | ராமச்சந்திரன் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 7th day of May 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை. (ச/பி.348 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி -**

நான் சம்பவயிடத்திற்கு சென்ற போது அருகில் வசிக்கும் நபர்கள் மற்றும் கிராம வாசிகள் அங்கு கூட்டமாக இருந்தார்கள் என்றால் சரிதான். நான் மனு விசாரணைக்காக அ.சா.1 உடன் சம்பவ இடத்தில் இருந்தேன் அப்போது அங்கு பிரச்சனை ஏற்பட்டு சத்தமாக இருந்தது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் இருந்து அ.சா.1 அவரது இருசக்கர வாகனத்தை தள்ளி நிறுத்தியிருந்தார் என்றால் சரிதான். அ.சா.1ன் வாகனத்தை கூட்டத்தில் யார் தள்ளிவிட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனது உயர் அதிகாரி என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.05.07 18:16:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 225/2025**

Preliminary Register

Deposition of **PW- 7 LW-7**

| Name | : | சங்கர் | Father Name | : | கலியபெருமாள் |
|---|---|---|---|---|---|
| Village | : | வலங்கைமான் | Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 56 | Calling | : | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 7th day of May 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20.03.2025ம் தேதி காலை 09.30 மணியளவில் பணியிலிருந்த போது அ.சா.1 செந்தில் குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.76/2025 , ச/பி.126(2), 296(b), 132, 351(2)BNS மற்றும் பிரிவு 4 of TNPHW Actன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேல் விசாரணைக்காக வழக்கு கோப்புகளை உயர் அதிகாரிகளின் பார்வைக்கு வைத்தேன். அவர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 19.03.2025 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நாள் 20.03.2025 என்றால் சரிதான். நான் சம்பவயிடம் சென்று விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.05.07 18:16:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.